# வாலிபப் பெரியார் ஏ.வி.பி.ஆசைத்தம்பி நூற்றாண்டு விழா!

## (சில நினைவுக் குறிப்புகள்)

நேற்றைய தொடர்ச்சி...


இத்தகவலை, விருதை தி.மு.கழகத்தினர், மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டதோடு வழக்கை நடத்துவதற்கு நிதியைத் திரட்டுவதற்காக ஐந்து பேர் கொண்ட நிதி வசூல் கமிட்டியொன்றையும் நிறுவினர். மேற்படி கமிட்டிக்குப் பொருளாளராக இருந்து பணியாற்ற தோழர் அய்யாச்சாமியும், செயலாளராக இருந்து ஆவன செய்ய தோழர் இளஞ்செழியனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேற்படி வழக்குக்கு, அண்ணாதுரை அளித்த ரூபாய் 50, முதன் முதலாக வரவு வைக்கப்பட்டது. பின்னர் ஆசைத்தம்பியின் தந்தையாரையும் மற்ற முக்கியத் தோழர்களையும் சந்தித்துவிட்டு, தகவலைப் பொதுச்செயலாளரிடம் அறிவிப்பதற்காகத் தோழர் என்.வி.என். நேராகச் சென்னைத் திரும்பினார்.

அப்பீல் வழக்கு சம்பந்தமாக, உடனிருந்து கவனித்துக் கொள்வதாகத் திருச்சி மாவட்டத் தோழர்களும், மேற்படி மாவட்ட தி.மு.க. துணைச்செயலாளர் தோழர் பராங்குசமும் அறிவித்துள்ளனர். 23ஆம் தேதி ஞாயிறு விடுமுறையாதலால், திங்களன்று, தோழர் ஆசைத் தம்பியும், மற்ற இரு தோழர்களும் சிறைச்சாலை யிலிருந்து விடுவிக்கப்பட்டனர். உரிமைப் போரில் துவக்க அத்தியாயம் ஆரம்பமாகியிருக்கிறது. கஷ்ட நஷ்டங்களைத் துச்சமென மதிக்கும் திறமை படைத்த காளை கள்தாம் நாம்! எனினும், நீதி கோரி நிற்கிறோம்! அதற்கான நடவடிக்கைகளைச் செய்வதென, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் முடிவு செய்யப் பட்டிருக்கிறது. தலைமைக் காரியாலயத்தின் விருப்பை யறிந்து மனமகிழ்வுடன் பொறுப்பேற்றுக் கொண்ட விருதைக் கிளைக் கழகத்தவரின் ஆர்வத்தைப் பாராட்டுகிறோம். வெற்றி பெறுவதற்கான ஏற்பாடுகளை, விரைவில் முடிக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.

**காந்தியாரின் பாதையில் நடப்பதாகக் கர்ஜனை யெழுப்பும் கனவான்கள் ஆட்சியில், நம்மீது வீசப் பட்டிருக்கும் அம்பு இது. சாதாரணமானதல்ல, கூட்டைத் திறந்துவிட்டு 'சிங்கமே வெளியில் வா!' என்று வேண்டு மென்றே வீண் வம்புக்கிழுப்பது. ஆகவே, நாம் நீதியின் முன் செல்கிறோம் நேர்மையைத் துணையாகக் கொண்டு!**

**உரிமைப் போரின் முதல் அத்தியாயம் ஆரம்பமாகிறது, அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய இயன்ற அளவு பொருளுதவி செய்யுமாறு பொதுவாக வசதி படைத்த தோரையும், குறிப்பாக விருதுநகர்த் தோழர்களையும் கேட்டுக் கொள்கிறோம்."**

ஆசைத்தம்பியின் வழக்கு உயர்நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்து கொள்ளப்பட்டது. அப்பீலில், அவர் உயர்நீதி மன்றத்தால், ஜாமீனில் விடுதலையானார். இதற்குள் சுமார் இரண்டு மாதத்தில் இச்செய்தி கழகத்தை மகத்தான எழுச்சிக் குள்ளாக்கியது. காங்கிரசாரின் இச்செய்கையினால், ஆசைத்தம்பியின் புகழ் கட்சி வட்டாரங்களைக் கடந்து, தமிழகப் பொது மக்களிடையேயும் பரவலாயிற்று.



1924–2023





ஆசைத்தம்பி இனப்பற்று மிக்கவர். தமிழர்களின் இன்னல்களைக் கண்டு சகித்துக்கொள்ள முடியாதவர். அவர், 1953ஆம் ஆண்டு பம்பாய் தாராவி பகுதிக்கு அழைக்கப்பட்டு, அங்குள்ள தமிழர்கள் ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் பங்கு கொண்டார். அச்சமயத்தில் அவர்கள் படும் இன்னல்களைக் கண்டு கசிந்துருகி அதுகுறித்து 'திராவிட நாடு' இதழில் (01.02.1953) பின்வரும் சிறிய கட்டுரையொன்றை அவர் எழுதியிருந்தார். அதனை இங்கே அப்படியே வெளியிடுகிறோம். அக்கட்டுரைக்குக் 'கண்டேன், திகைத்தேன்' என தலைப்பிடப்பட்டிருந்தது.

'பம்பாய் தாராவி என்றால், நல்லதொரு இடமாக இருக்கும் என்று நினைத்தேன். நேரில், தாராவியைத் தரிசித்தபோது, பம்பாய் தாராவி, பாழடைந்த, இடமாக சுடுகாடு போன்று காட்சியளிக்கக் கண்டேன். ஆயிரமாயிரம் தமிழர்கள் இங்கு வாழ்கிறார்கள் என்று சொல்லுவதைவிட, தினமும் வதைகிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். சென்னை மாகாணத்திலே உள்ள சேரிகளைவிட, மிகமிகக் கேவலமான மண் குடிசைகளும், கிழிந்த சாக்குகளால் ஆக்கப்பட்ட கூடாரங்களும், எட்டு அடி அகல நீளமுள்ள குடிசைகளிலேயே நான்கு பேர்களுக்குக் குறையாமல் குடியிருந்து கொண்டு, சென்னைத் தமிழர்கள் பம்பாயில் கொடுமைப்பட்டு வருகிறார்கள்.

சிறைச்சாலைகளில் உள்ள அறைகளில், நீள அகலம் அதிகமானதாகவும், காற்றோட்டமானதாகவும், சுகாதாரமாகவும் உள்ளன என்று சொல்லலாம். ஆனால், பம்பாய் தாராவியிலே, தமிழ் மக்கள் வாழும் குடிசைகள், சிறைச் சாலைகளைவிட மோசமாகக் காட்சியளிக்கின்றன. சாதாரண பஞ்சாயத்து போர்டின் நிர்வாகத்தின் கீழுள்ள கிராமம்கூட சுத்தமாக சுகமாக அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், பம்பாய் தாராவியைப் பார்க்கிறபோது, பம்பாய் கார்ப்பரேஷன், அதற்கு மேயர், கமிஷனர், அங்கத்தி னர்கள் ஆகியோர் இருக்கிறார்களா? செத்து விட்டார்களா? – என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

பம்பாய் கார்ப்பரேஷன் மனது வைத்தால் ஓட்டைக் குடிசையிலே வாழுகிற தாராவி தமிழர்கட்கு, கூட்டுறவுத் திட்டப்படி குறைந்த வாடகையில் சிறந்த வீடுகளைக் கட்டிக் கொடுக்க முடியும். பல நகர சபைகள், இதைச் செய்கின்றன. சென்னை கார்ப்பரேஷன், கோயம்புத்தூர் நகர சபை ஆகியவை வடநாட்டவர் என்று கருதப்படுகின்ற அகதிகட்கு, அழகான வீடு அமைத்துக் கொடுக்கவும், வேலை வாங்கிக் கொடுக்கவும், ரொக்கக் கடன் கொடுக்கவுமான காரியங்களில் ஈடுபட்டும், தாராவியில் வாழுகிற தமிழர்கட்கு பம்பாய் சர்க்காரோ கார்ப்ப ரேஷனோ தாராவிப் பகுதியில் தன் கடமையைச் செய்யத் தவறியது வருந்தத்தக்கது மட்டுமல்ல; கண்டிக்கக் கூடியதுமாகும். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தோழர் காமராசர், தாராவிக்கு வந்து விட்டுப் போயிருந்தார் என்று கேள்விப்பட்டேன்.

'மந்திரி மேக்கர்' என்று மதிக்கப்படுகின்ற காமராசர், தாராவியில் வாழுகின்ற தன் நாட்டு சகோதரர்கள் நிலைமையைப் பற்றி, பம்பாய் சர்க்காருக்காவது சென்னை சர்க்காருக்காவது அறிவித்திருந்தால் கூட, ஏதாவது நன்மை கிடைத்திருக்கும். உலகத்தில், ஒவ்வொரு இடமும் வேகமாக முன்னேறிக் கொண்டு போகும் இந்தக் காலத்திலே, தாராவி, நாளுக்கு நாள் தாழ்ந்து கொண்டே போகிறது. சென்னைத் தலைவர்களும் அரசாங்கமும் தாராவிப் பகுதியின் கேவல நிலையை மாற்ற, தக்க நடவடிக்கையை உடனே எடுக்க வேண்டும். தாராவியிலே வாழுகிற தமிழ் மக்களும், சாதி மத கட்சி பேதமின்றி ஐக்கியப்பட்டு ஆவன செய்ய வேண்டும்."

ஆசைத்தம்பியின் தனி அரசு இதழ், தனது பங்களிப்பை உரிய தருணத்தில் அளித்தது. இவர் 'திராவிட சினிமா' எனும் இதழையும் நடத்தினார். இவரது தனியரசு 1958 முதல் 1963 வரை நாளேடாக வெளிவந்தது. இதனைக் 'கழக தினத் தந்தி' எனப் போற்றினர். இவரது கதை சொல்லும் திறன் புனைவாற்றல் ஆகியன காரணமாகத் திரைப்படத் துறையிலும் இவர் பணியாற்றினார். மாடர்ன் தியேட்டர்ஸ் கதை இலாக்காவில் பணியாற்றிய இவர் அந்நிறுவனம் தயாரித்த ஆங்கிலத் தழுவலான ஒரு கதைக்கு உரையாடல் எழுதினார். அந்தத் திரைப் படம்தான் எம்.ஜி.ஆர். நடித்த 'சர்வாதிகாரி'! இதனைத் தொடர்ந்து இவர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் கதை, உரையாடல் அமைத்த 'வளையாபதி' படத்திற்கும் சில காட்சிகளை அமைத்துக் கொடுத்தார். இவ்விவரத்தை இயக்க நடிகரான வளையாபதி முத்துகிருஷ்ணன் நம்மிடம் தெரிவித்தார்.

**ஏ.வி.பி.ஆசைத்தம்பியின் கட்சி வாழ்க்கை என்பது மிகவும் உறுதியானது. அவர், இறுதிவரையும் கட்சி மாறாமல் பணியாற்றியவர். எத்தகைய சர்ச்சைகளையும் அவர் கட்சியினுள்ளே விவாதித்தார். ஒரு கட்டத்தில், அவரது தனி அரசு ஏட்டிலும் பகிரங்கமாகவும் எழுதினார். ஆனால், எந்தச் சூழ்நிலையிலும், மோதல்கள் – பிளவு வரை சென்ற போதும், அவர் உறுதியோடு தி.மு. கழகத்தில் தொடர்ந்தார். அறிஞர் அண்ணா இவரின் முரண்பாடுகளை அணுகிய விதத்தினை இராம.அரங் கண்ணல் தமது நினைவுகளில் குறிப்பிட்டுள்ளதை இன்றும் நாம் படிக்கலாம். அதில் அண்ணாவிடம் ஆசைத்தம்பி காட்டிய பணிவையும் நாம் அறிந்து கொள்ளலாம். கட்சிப் பங்கு கொள்ளச் செய்த அத்தனை போராட்டங்களிலும் அவர் கலந்து கொண்டு சிறை சென்றார். தி.மு.கழகம் தொடங்கப்பட்ட காலத்தி லிருந்தே அதன் முன்னணித் தலைவர்களுள் ஒருவராக வும், கட்சியின் பிரச்சாரக்குழு உறுப்பினராகவும் கட்சி வாழ்க்கையைத் தொடங்கிய அவர், கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் வரை உயர்ந்தார். 'நெருக்கடி நிலை' பிரகடனம் செய்த பிறகு தி.மு.கழக ஆட்சி, முதன் முதலில் கலைக்கப்பட்டபோது 'மிசா' கைதியாக அவர் சிறையில் ஓராண்டுக்காலம் இருந்தார்.**

1957 – ஆம் ஆண்டு கழகம் தேர்தலில் ஈடுபட்ட போது, ஆசைத்தம்பி ஆயிரம் விளக்குத் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சட்டமன்றத்தில் அவர் எல்லா விவாதங்களிலும் கலந்து கொண்டார்; கேள்வி மேல் கேள்விகளை எழுப்பினார். 1967 இல் எழும்பூர்த் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1968–69 இல் தமிழகச் சட்டமன்றத்தில் மதிப்பீட்டுக் குழுத் தலைவராக அவர் பணியாற்றினார். 1968இல் இங்கிலாந்தில் நடந்த காமன்வெல்த் நாடாளு மன்ற மாநாட்டில் இந்தியப் பிரதிநிதி யாக அவர் கலந்து கொண்டார். நெருக்கடி நிலைக்கு பிறகு, நாடாளுமன்றத்தில் நடைபெற்ற தேர்தலில் தி.மு.கழகத்தின் சார்பாக ஏ.வி.பி.ஆசைத்தம்பி மட்டுமே வெற்றிபெற்றார். அவர் நாடாளுமன்றத்தில் தி.மு.க.வின் குரலாக எதிரொலித்தார். அவர் நாடாளு மன்றத்தில் இறுதியாக ஆற்றிய உரையை இங்கே வெளியிடுகிறோம்:

"மத்திய அரசின் உள்துறை இலாகா, இந்தியாவில் பலமதங்கள் இருந்தும் இந்து ராஜ்யம் உருவாக்க முயல்வதாக கோவிந்தன் நாயர் குற்றம் சாட்டினார். ஆனால், மத்திய அரசின் உள்துறை இலாகா, கோவிந்தன் நாயர் கூறியதுபோல், வெறும் இந்து ராஜ்யத்தை மட்டு மல்ல; இந்திமொழி பேசும் இந்துக்களின் ராஜ்யத்தை உருவாக்க முயல்கிறது என்று தி.மு.க. சார்பில் குற்றம் சாட்டுகிறேன். இந்தியா விடுதலை பெற்றதும், சுதந்திர மதம் தப்பில், அனைவரும் இருந்த நேரத்தில் 'இந்திதான் இந்தியாவின் ஆட்சி மொழி' என்ற அரசியல் சட்டத்தை உருவாக்கிவிட்டனர்.

இந்தி ஆட்சி மொழியாக பவனிவர ஆரம்பித்தவுடன், இதை அனுமதித்தால், இந்தி ஏகாதிபத்தியம் உருவாகி விடும் என்றும்; ஜனநாயக சமதர்மக் குடியரசுக்கே இடமில்லாமல் போய்விடும் என்றும் கூறி, இந்தியை எதிர்த்த முதல் நாடு நான் சார்ந்துள்ள தமிழ்நாடுதான்! எட்டு வீரர்கள் உயிரோடு தங்களைத் தாங்களே எரித்துக் கொண்டு இந்தியை எதிர்த்தனர். ஆயிரக்கணக்கில் சிறை சென்றோம். இங்கே, அப்போது அமைச்சர்களாக இருந்த சி.சுப்பிரமணியமும் ஓ.வி. அழகேசனும் தங்கள் எதிர்ப்பைக் காட்டினர். இதன் பிறகாவது, 'இந்தி பேசாத பகுதி மக்கள் விரும்பும் வரை, ஆங்கிலமே தொடர்ந்து நீடிக்கும்' என்று பழைய பிரதமர் பண்டித நேருவின் உறுதிமொழி காப்பாற்றப்பட்டதா ? இல்லவே இல்லை! 1975 ஜுன் 25 இல், திருமதி இந்திரா காந்தியால் அவசர நிலைப் பிரகடனம் அறிவிக்கப்பட்ட அடுத்த நாளே இந்தியை எங்கும் புகுத்த உள்துறை இலாகாவில் இந்திக்கென்றே ஒரு தனி இலாகா பெரிய அளவில் அமைக்கப்பட்டுச் செயல்பட ஆரம்பித்தது.



**க.திருநாவுக்கரசு**
திராவிட இயக்க எழுத்தாளர்

இதன் விளைவு, இன்று வட இந்தியாவிலுள்ள வங்கிகள், பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகள் இந்தியில் மட்டுமே உள்ளன. உள்துறை இலாகாவின் இத்தகைய செயலால் இந்தி வெறியர் களுக்கு தைரியம் ஏற்பட்டு, குடியரசுத் தலைவரே அவமானப்படுத்தப்பட்டுள்ளார். சமீபத்தில் குடியரசுத் தலைவர் அவர்கள் இரண்டொரு பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட போது, அவர் முன்னிலையிலேயே இந்தி மொழியில் பேசி அவரை வேதனைப்படுத்தி, ஆத்திரப்பட வைத்தனர்.

உள்துறை இலாகாவின் முறையற்ற செயலால், இந்தியக் குடியரசுத் தலைவரே இரண்டாந்தர பிரஜை யாகத் தாழ்த்தப்பட்டு விட்டார். இந்த நிலை நீடித்தால், இந்தி இந்தியா, இந்தி பேசாத இந்தியா என்று நாடு இரண்டு துண்டாகும் நிலை ஏற்படும் என்று எச்சரிக்கிறேன். எனவே, இந்தியாவைக் காப்பாற்ற தேசிய ஒருமைப்பாட்டை நிலைநாட்ட, நேருவின் உறுதி மொழியை,



உள்துறை இலாகா உடனே அமுல்படுத்த முன்வர வேண்டும். நேருவின் உறுதிமொழி அமுல் படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க, ஒரு நாடாளுமன்றக் குழு அமைக்கவேண்டும். அந்தக் குழுவில் இந்தி பேசாத பகுதியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே அங்கம் வகிக்க வேண்டும்.

ஆசைத்தம்பியின் கட்சி வாழ்க்கை –அவரது உறுதி மிக்க போக்கு அனைவராலும் பாராட்டப் பெற்ற ஒன்றாகும். 1950 இல் காஞ்சியில் செங்கற்பட்டு மாவட்ட தி.மு.க. மாநாட்டை தொடங்கி வைத்து பேசுகிறபோது அவர் எந்த உறுதியில் பேசினாரோ, அதைவிடப் பன்மடங்கு உறதியோடு கோவை தி.மு.க. 5 ஆவது மாநில மாநாட்டில் (1975) அவர் பேசினார். 1971 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், ஆசைத்தம்பி, வெற்றி வாய்ப்பை இழந்தார். ஆனால், முதல்வரான கலைஞர் அவர்கள், அவரை சுற்றுலா வாரியத் தலைவராக நியமனம் செய்தார். சுற்றுலா வாரியத்தின் மூலமாக வெளிநாட்டுப் பயணிகளைக் கவரத்தக்க வகையில் திட்டங்களை வகுத்து செயலாற்றினார்.

**ஆசைத்தம்பி, ஒரு பத்திரிகையாளராக, எழுத்தாளராக, சிறந்த பேச்சாளராக, திரைக்கதை அமைக்கும் வளமான உரையாடல் ஆசிரியராக, நகரமன்ற உறுப்பினராக, சட்டமன்ற உறுப்பினராக, நாடாளுமன்ற உறுப்பினராக பொது வாழ்வில் உயர்ந்து கொண்டே சென்றவர். பள்ளியிறுதி வகுப்பே படித்தாலும், தமது ஆற்றலை அவர் வளர்த்துக் கொள்வதில் எப்போதும் முனைப்பாக இருந்தவர். தன்னம்பிக்கை, விடாமுயற்சி, உறுதி ஆகிய முக்குணங்களை, அவர் இயல்பாக பெற்றிருந்தார். தி.மு.கழகத்தின் சார்பாக, ஒற்றைக்குரல் மனிதராக அவர் நாடாளுமன்றத்தில் விளங்கினார். இயற்கை அக்குரலையும் அக்கட்டத்தில் நம்மிடமிருந்து பிரித்தது மிகுந்த வேதனையான ஒன்றாகும்.**

ஆசைத்தம்பி அவர்களது மரணம், யாரும் எதிர்பாராமல் நடந்தேறி விட்டது. அவர் தமது மனைவியார் பரமேஸ்வரி அம்மையாருடன் அந்தமான் தீவுகளில் கழக நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதற்காக விமானத்தின் மூலம், 6-4-1979 மாலை அந்தமான் போர்ட் பிளேயர் விமான நிலையத்தில் இறங்கினார். சிறிது நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டார். பிறகு, கழகக் கொடியை ஏற்றி வைத்துவிட்டு, தொழிலாளர் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டார். அப்போது அந்நிகழ்ச்சியிலிருந்து கொஞ்ச தூரம் நடந்துவரும் போது, 'சற்று களைப்பாக இருக்கிறது. கண்ணை மறைப்பதுபோல் தெரிகிறது' என்று தம் மனைவியாரிடமும் மற்றவர்களிடமும் தெரிவித்தார். ஆனால், உண்மை என்னவென்றால், அன்று காலையிலேயே (6-4-79) அவருடைய தலையில் உள்ள இரத்தக் குழாய் சிறிதளவு வெடித்து, அது அவருக்கே தெரியாமல் அவர் கண்ணை மறைக்கும் அளவிற்கு ஆகிவிட்டது.

இவ்வளவு வேதனைகளும் அவருக்கு எந்தவித 'வலியுமில்லாமல்' நடந்தேறி இருக்கிறது. உடனே மருத்துவ மனைக்கு அவரை அழைத்துச் சென்று சேர்த்தார்கள். ரத்தநாளம் வெடித்திருக்கிறது; இங்கே யுள்ள மருத்துவமனை வசதி போதாது, திரும்ப அழைத்துச் செல்வதுதான் நல்லது என்று டாக்டர்கள் கூறினார்கள், மருத்துவ வசதி இல்லாத இடத்தில் சிக்கிக் கொண்டோமே என அவர் மனைவியிடத்திலே வருந்தினார். அழைத்துச் செல்லப் பட்ட அதே மருத்துவ மனையில் 7-4-1979 இரவு 8.00 மணியளவில் ஆசைத்தம்பி இயற்கை எய்தினார்.

அவரது உடல் அந்தமானிலிருந்து சென்னைக்கு கொண்டு வருவதற்கு பெரிய பிரச்சினையாக இருந்தது. 10-4-1979 காலைதான், சென்னைக்கு விமானத்தில் உடலைக் கொண்டு வந்து பொது மக்களின் பார்வைக்கு அஞ்சலி செலுத்துவதற்காக வைக்கப்பட்டது. கழகத் தலைவர், பொதுச்செயலாளர், இதர தலைவர்கள் அனைவரும் விமான நிலையம் சென்று உடலைப் பெற்றுக் கொள்ளக் காத்திருந்தனர். அன்று மாலையே, ஆசைத்தம்பியின் இறுதிப் பயணம் முடிந்தது.

கலைஞர் அவர்கள், ஆசைத்தம்பியின் மறைவு குறித்து தமது இரங்கற் செய்தியில் "தலையில் பேரிடி வீழ்ந்து விட்டது போன்று அதிர்ச்சிக்கு ஆளாகியிருக்கிறேன்! தன்மான இயக்கத்தின் தளபதிகளில் ஒருவர், தி.மு.கழகத்தின் வலிமைமிக்க தூதர்; நிலைகுலை யாத கொள்கை நெஞ்சம் கொண்டவர், ஐயாவின் தொண்டர், அண்ணாவின் அருமைத் தம்பி, ஐயோ! எங்கள் ஆசைத்தம்பி போய்விட்டார்! அவர் நாவசைந்தால் நாடதிர வேங்கையின் முழக்கமன்றோ கேட்கும்?

அரிமா என நிமிர்ந்து நின்று, மேடைகளில் அவர் அடுக்கடுக்காக எடுத்து வைத்த வாதத் திறமையில் வயப்படாதவர் யாருண்டு? எத்தனையோ கருத்து வேறுபாடுகள், இருப்பினும், அவற்றை பேசித் தீர்த்துக் கொண்டு அன்று முதல் இன்று வரையில் கழகத்தின் கட்டுக்கோப்புக்கு இம்மியளவு ஊனமும் ஏற்படாமல் காத்து வந்த என் ஆருயிர் உடன்பிறப்பை இழந்துவிட்டேனே!" என்று குறிப்பிட்டிருந்தார்.

பேராசிரியர் ஆசைத்தம்பியைப் பற்றி குறிப்பிடும் போது, 'ஆசைத் தம்பியைப் போல இன்னொருவரை ஈடாகச் சொல்ல முடியாது' எனக் குறிப்பிட்டிருந்தார்.

1989-90ஆம் ஆண்டுகளில் முரசொலிக்காக ஆசைத்தம்பியைப் பற்றி நாம் எழுதினோம். அப்போது சிலவிவரங்களைத்தெரிந்துகொண்டோம். அந்தக் கட்டுரையின் திருத்தப்பட்ட வடிவமே இக்கட்டுரை. ஆசைத்தம்பியின் மனைவி பரமேசுவரி அம்மையார் இப்போது இல்லை. அக்.13ஆம் தேதி நடைபெறும் நிகழ்ச்சிக்காக நமது தோழர்கள் ஆசைத்தம்பியின் மகன் சௌந்திர பாண்டியனைச் சந்தித்து உள்ளனர். இன்று கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெறவிருக்கிறது. அக்கூட்டத்தில் ஆசைத்தம்பியின் மகன் சௌந்திர பாண்டியன் கலந்து கொள்கிறார். ஆசைத்தம்பியின் இன்னொரு மகன் காந்தியும் ஒரு மகளும் இப்போது உயிருடன் இல்லை.

ஏ.வி.பி.ஆசைத்தம்பியின் நூற்றாண்டு தொடக்க விழாக் கொண்டாடப்படுகின்ற இந்நேரத்தில் கொள்கையிலும் இயக்கத்தின் மீதும் அவர் எவ்வளவு பற்று உடையவராக இருந்து மறைந்து இருக்கிறார் என்பதினை ஒவ்வொரு தோழரும் நினைவு கூர்ந்து அவரைப் போற்ற வேண்டும். வாழ்க ஆசைத்தம்பியின் புகழ்!